# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 1640/19 - 2010 පෙබරවාරි 10 වැනි බදාදා - 2010.02.10

***1640/19 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 10 ஆந் திகதி புதன்கிழமை***

(அரசின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல. : என்சீபி/எம்ரீ/6 - 111 /577/333.
காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின் இல. : எல்டீ/05/ 2006/டபிள்யுஎஸ்/ 275.

ஒரு பொதுத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை அரசு எடுத்துக்கொள்ள எண்ணியிருக்கிறது என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :

வட மத்திய மாகாணத்தில், அநுராதபுரம் மாவட்டத்தில், மிஹிந்தலை பிரதேச செயலாளர் பிரிவில், கனதரா கோரளையின் சிறு பிரிவில், மிஹிந்தலை கிராமத்தில் அமைந்துள்ள நில அளவை மா அதிபரால் அளந்து தயாரிக்கப்பட்ட 2009.08.20 ஆந் திகதியிடப்பட்ட எப்.வீ.பி. 564 ஆம் படிவத்தில் மேலதிகமான 50 எனக் குறிப்பிடப்பட்டுள்ள 'மிஹிந்தலேகெலே' என்ற காணியில் சுமார் 0.0070 ஹெக்டயார் முழு விஸ்தீரணமுடைய கீழ்காணும் காணித் துண்டின் எல்லைகள் :

**துண்டு இல. 340 - மிஹிந்தலேகெலே - விஸ்தீரணம் : 0.0070 ஹெக்டயார்**

வடக்கு : 1 ஏ ஆம் இலக்க காணித்துண்டு ; கிழக்கு : 1 சீ இலக்கமும் 1 ஏ இலக்கமும் கொண்ட காணித்துண்டுகள் ; தெற்கு : 1 ஏ ஆம் இலக்க காணித்துண்டு ; மேற்கு : 1 ஏ ஆம் இலக்க காணித்துண்டு.

காணிக்கு உரிமை கோருபவர்களின் பெயரும் முகவரியும் : 01. விகாராதிபதி தேரர் அவர்கள், மிஹிந்தலை ரஜமஹா விகாரை, மிஹிந்தலை. 02. பிரதான பொறுப்பாளர் அவர்கள், பிரதான பொறுப்பாளர் திணைக்களம், கொழும்பு 7.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2010 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 25 ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு மிஹிந்தலை பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும் படியும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2010.03.18 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

எம். டபிள்யு. எம். எம். மடஹபொல,
பிரதேச செயலாளர்,
மிஹிந்தலை.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
மிஹிந்தலை,
2010.02.08.

02 - 589


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.